மனனம் செய்ய இந்த வார வசனம்:

"ஆண்டவர் ஒடுக்கப்பட்டோர்க்கான நீதியை நிலைநாட்டுகின்றார்."

(திபா:146:7)

அவரிடம் இருந்த சொற்பத்தையும் ஆலய உண்டியலில் போட்டுவிட்டார். கடவுள் மீது கொண்டிருந்த நம்பிக்கையின் ஆழத்தை வெளிப்படுத்தும்விதமாக அசாதாரணமான தாராளகுணத்தின் வழியாக அதை வெளிப்படுத்தினார். கொடுப்பதற்கு மிக சிறிதே இருந்தது. ஆனாலும் அனைத்தையும் அவர் வழங்கிவிட்டார்.

இந்தப் பகுதியை நாம் வாசிக்குபோது, கேட்கவேண்டிய கேள்வி: இன்று இயேசு எங்கே தம்மை அடையாளம் கண்டுகொள்வார்? நற்செய்தி கூறுவது, இயேசு பெரும்பாலும் தம்மை, கோயிலில் கண்ட கைம்பெண்ணில் கண்டுகொள்வார். பெரும்பாலும் இதுபோன்றவர்கள் கவனிக்கப்படாமல் போவர். இருந்தபோதும், கடவுள்மீது கொண்டிருந்த நம்பிக்கையினால், அவர்களுக்குக் கணக்கில்லாமல் தரப்படும். கைமாறு எதிர்பார்க்காமல் அவர்கள் அதை விட்டுச்சென்றார்கள். அவர்களின் உடைமைகளை மட்டுமல்ல; அவர்களையே தந்தார்கள். **நாம் எவ்வளவு கொடுத்தோம் என்று அளவிடுவதில் இல்லை; ஆனால் எதை விட்டுச் சென்றோம் என்பதைக் காணுமாறு இயேசு அறிவுறுத்துகிறார்.**

எபிரேயருக்கு எழுதிய கடிதத்தில் அதன் ஆசிரியர் கூறுவது: இயேசு கிறிஸ்து இரக்கமுள்ள ஒரு தலைமைக் குருவாக, மனிதகுலத்தின் மீட்புக்காக தம் சொந்த உயிரையேப் பரிசாகக் கையளித்தார். ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்றோர் மீது அக்கறைக் காட்டும் கடவுளுக்குப் புகழ்பாடுமாறு திருப்பாடல் ஆசிரியரும் கூறுகிறார்.

இங்கே கொடுப்பது என்பது பணத்தை மட்டும் குறிப்பிடுவது அல்ல; நம்முடைய தாராள உள்ளத்தை பலவடிவங்களில் காட்டலாம். சிலருக்கு தவறை மன்னிப்பதும் தாராள குணம் தான். மற்றும் சிலருக்கு, ஆண்டவர் அவர்களுக்குக் கொடுத்த திறமைகள், கொடைகளைக் கொண்டு பணிசெய்வதும் தாராள குணம் தான். எந்த வடிவங்களில் நாம் கொடுத்தாலும், இன்றைய வாசகங்களில் நாம் காணும் இரண்டு கைம்பெண்களும் நமக்கு ஆசிரியர்களாக இருக்கின்றார்கள்.

எதிர்நோக்கின் சீடர்களாக இருக்கும் நாம், நம்முடைய தாராள உள்ளத்தாலும், இரக்கம் ஒற்றுமை ஆகிய குணங்களாலும், குறிப்பாக, இன்று நம்மோடு இருக்கும் ஏழைகள் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் மக்களிடம் நடந்துகொள்வதிலிருந்து நாம் அவரின் சீடர்களாக அறியப்படவேண்டும். ✜

**இன்றைய வாசகங்கள்:**

1அரசர்: 17: 10-16;
திருப்பாடல்: 146: 7-10;
எபிரேயர்: 9: 24-28;
மாற்கு: 12: 38-44 (அ) 41-44.

INTERNAL CIRCULATION ONLY
BUL 45/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

7 நவம்பர் 2021

Newbec
NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 32 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்



மாதாந்திர கருப்பொருள்:
**ஏழைகள்:**
**திரு அவையின் புதையல்**

# கொடுப்பதற்கு ஒன்றும் மிச்சமில்லை என்பதுவரை கொடு

கொடுப்பதற்கு மிகவும் குறைவாக இருந்தும் நிறைவாகக் கொடுத்த இரண்டு கைம்பெண்களைப் பற்றி முதல் வாசகத்திலும் நற்செய்தியிலும் நாம் பார்க்கிறோம்.

முதல் வாசகத்தில் ஆதரவற்ற ஒரு ஏழை கைம்பெண்ணைப் பற்றி வாசிக்கிறோம். இறைவாக்கினர் எலியா அவரிடம் உதவிகேட்டபோது, பானையில் கையளவு மாவும், கலயத்தில் சிறிதளவு எண்ணெய் மட்டுமே அவரிடத்தில் இருந்தது. நற்செய்தியில் நாம் பார்க்கும் கைம்பெண், அவருக்கென்று எதுவுமே இல்லை. அவருக்கு இருந்ததெல்லாம், ஒரு கொதிராந்துக்கு இணையான இரண்டு செப்புக் காசுகள் மட்டுமே.